# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 01 திங்கட்கிழமை 17.11.2025 கதிர் 373



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel





# திருமலைக் கடற்கரையில் மீண்டும் வந்தமர்ந்த புத்தர்

## தமிழ்த் தரப்புக்கள் கடும் சீற்றம் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி

திருகோணமலை, நவ. 17

தமிழர் தாயகமான திருகோணமலையில் மாநகர சபைக்குச் சொந்தமான கடற்கரைப் பகுதியில் முன் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் மீண்டும் இன்று பிற்பகல் புத்தர் சிலை வைக்கப்பட்டு சமய வழிபாடுகள் நடைபெற்றன.

7

## ஹசீஸ் போதைப்பொருளுடன் கைதான பல்கலை மாணவன் விளக்கமறியலில்!



யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் யாழ். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இரண்டாம் வருட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் நேற்று யாழ். கந்தர்மடம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

7

## ஆளுங்கட்சி தமிழ் எம்.பிக்கள் உடனே பதவி விலக வேண்டும்

### இப்படி சுமந்திரன் வலியுறுத்து



கொழும்பு, நவ. 17

“தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. எனவே, பிரதி

7

## பாதுகாப்புக் காரணங்களுக்காகவே நேற்றிரவு அகற்றப்பட்ட புத்தர் சிலை

### சபையில் அமைச்சர் வியாக்கியானம்



கொழும்பு, நவ. 17

“திருகோணமலை கடற்கரையை அண்டிய பகுதியில் நேற்றிரவு வைக்கப்பட்ட புத்தர் சிலை பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அங்கிருந்து பொலிஸாரால் அகற்றப்பட்டது.

7

## சீனாவில் மேலுமொரு தூதரகம் அமைக்கின்றது இலங்கை அரசு

### வெளிவிவகார அமைச்சர் தகவல்




கொழும்பு, நவ. 17

சீனாவில் மேலுமொரு தூதரகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசு திட்டமிடடுள்ளது.

7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கெஹெலியவின் குடும்பத்திற்கு எதிராக குற்றப்பத்திரிகைகள் தாக்கல்



கொழும்பு, நவ.17

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மகன் ரமித் ரம்புக்வெல்ல, மகள் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகள் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹறால் முன்னிலையில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கெஹெலிய ரம்புக்வெல்ல, ரமித் ரம்புக்வெல்ல, மகள் அமாலி நயனிகா ரம்புக்வெல்ல மற்றும் அவர்களது பணிப்பெண் நிபுணி கிரிஷ்ணஜினா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளுக்கு அமைய இந்த குற்றப்பத்திரிகை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, ஒவ்வொரு பிரதிவாதியையும் தலா ரூபா 50,000/- ரொக்கப் பிணை மற்றும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிபதி, அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்குமாறும் உத்தரவிட்டார்.

அதனையடுத்து, முன்விசாரணைக்காக அந்த இரண்டு வழக்குகளையும் ஜனவரி மாதம் 12 மற்றும் 14 ஆம் திகதிகளில் அழைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல்ல ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்குக்கும் இதன்போது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது, அவர்களை ரூபா 50,000ஃ- ரொக்கப் பிணை மற்றும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், பிரதிவாதிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதித்த நீதிபதி, அவர்களது கைரேகைகளைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

அந்த வழக்கையும் மீண்டும் முன்விசாரணைக்காக ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அழைக்குமாறும் இதன்போது உத்தரவிடப்பட்டது.

அமைச்சராக கடமையாற்றிய காலப்பகுதியில் முறைக்கேடாக சொத்துக்களை ஈட்டியமை தொடர்பிலேயே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்



கொழும்பு, நவ.17

பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று (17) காலை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் (புஆழுயு) பிரதிநிதிகள் குழுவொன்று ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

குறித்த பேச்சுவார்த்தை தற்போது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



# அரசு சேமித்து வைத்திருக்கும் நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்

கொழும்பு, நவ.17

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு காணப்படுகின்றன. இன்று, நமது நாடு சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளையும் தாண்டி, அரச வருமானத்தை ஈட்டியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (புனீ) சதவீதமாக அரச வருவாயில் 15ூ ஐக் கொண்டிருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனையிட்டாலும், இன்று அது 15.9ூ ஆக அதாவது 287 பில்லியன் ரூபா அரச வருவாயை ஈட்டியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



தொழில்முனைவோர், தொழிற்றுறையினர், சேவைகள், நிர்மாணத்துறைகளை வலுப்படுத்த வேண்டியிருப்பதால், ஐஆகு விதித்த இலக்கை விட அதிகமாக ஈட்டப்பட்ட மேலதிக 0.9ூ அல்லது ரூ. 287 பில்லியனை மேற்கூறிய துறைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்துங்கள். ஆரம்ப மீதி கூடிதலாக ஈட்டப்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறும்போது, அதற்காக ஆரவாரம் செய்பவர்களும் காணப்படுகின்றனர்.

இவ்வாறு ஆரவாரம் செய்வோருக்கு ஆரம்ப மீதி தொடர்பில் சரியான தெளிவு இல்லை. ஐஆகு இலக்குகளின்படி, ஆரம்ப மீதி 2.3 இல் பேணிச் செல்ல வேண்டும்.

இருந்த போதிலும் அது இப்போது 3.8 ஆக அதிகரித்து காணப்படுகின்றன. மேலதிகமாக ஈட்டிக் கொண்ட நிதியை நாட்டு மக்களுக்காக முதலீடு செய்யலாம், வரிச் சலுகைகளை வழங்கலாம், வீட்டுவசதிகள் போன்ற கனவை கூட நனவாக்கிக் கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கம் சேமித்து வைத்திருப்பதாகக் கூறும் மேலதிக நிதியை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். மேலதிகமாக ஈட்டிய நிதியை வைத்து திறைசேரியை நிரப்பி போதாது. 2028 ஆம் ஆண்டுக்குள் கடனை திருப்பிச் செலுத்த விரைவான பொருளாதார வளர்ச்சி தேவையாக காணப்படுகின்றன.

நிர்மாணத் துறையில் மூளைசாலிகள் வெளியேற்றம் மற்றும் வளங்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் காணப்படுவதால், இதற்கு முறையான தேசியக் கொள்கையொன்று அமைந்து காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் ஆரம்பான கெதல்ல யுசவ ழுக டுளைைபெ 2025 கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தமக்கென சொந்த வீட்டை கொண்டிருப்பது ஒவ்வொரு குடும்பத்தினதும், பிரஜையினதும் விருப்பமும், கனவுமாக காணப்படுகின்றன.

இந்த கனவை நனவாக்குவதற்கு தற்போதுள்ள கட்டமைப்பில் பல சிரமங்கள் காணப்படுகின்றன. தமக்கென வீட்டை கொண்டிருப்பது மூலதனச் சொத்தாக காணப்பட்டாலும், நிர்மாணத்துறை பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால், இளம் குடும்பங்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் உட்பட பெரும்பாலான மக்கள் தமக்கென சொந்த வீட்டை சொந்தமாக்கிக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்காக விசேட நிதி ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது அரசாங்கம், அரச கொள்கைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பொறுப்பாக அமைந்து காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புதிய நிலைபேறான அபிவிருத்தி முறையில், காணி பரப்பளவு வரையறுக்கப்பட்டு அதற்குப் பற்றாக்குறையும் காணப்பட்டு வரும் நிலையில், மக்களுக்கு நவீன, நிலையான வீட்டை சொந்தமாக்கிக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

புதிய வீடமைப்பு முறைகளையும் புதிய மாதிரிகளையும் அறிமுகப்படுத்திக் கொடுக்க வேண்டும். பாரம்பரிய கட்டமைப்பிற்குள் சிக்கிக் கொள்ளாமல், புதிய முறைகள் மூலம், முதல் முறையாக வீடு வாங்குபவர்களுக்கு விசேட திட்டங்களை வகுத்தல், வீட்டு உரிமையாளருக்கான வரிச் சலுகைகள் மற்றும் இறக்குமதிகளின் செலவை நிர்வகித்தல், காப்புறுதி சேமிப்பு செலவினங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல் போன்ற துறைகளில் புதிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.


வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் திறன் எமக்கு இருந்தால், எம்மால் செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.


வீட்டு வரைபடங்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுத்தல் மற்றும் அனுமதிகளைப் பெறுவதில் காணப்படும் நடைமுறை தாமதம் காரணமாக, டிஜிட்டல் மயமாக்கல் மூலம் இந்த செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டும். நாட்டில் நில பயன்பாட்டுத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

பயன்படுத்தப்படாத அரச காணிகளைப் பயன்படுத்தி, வீட்டுவசதித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெரும் பங்களிப்பைப் பெற்றுத் தரும், இலட்சக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு முக்கியமான துறையான நிர்மாணத் துறையை வலுப்படுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு என்பதால் இந்த கெதல்ல கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## ஆரம்பமானது ஐயப்பன் விரதம் மாலை அணிவித்து விரதத்தை தொடங்கிய பக்தர்கள்!







ஐயப்பன் விரதமானது இன்றையதினம் ஆரம்பமாகியுள்ள நிலையில், வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயத்தில் ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது கிருஸ்ணா குருசாமியால் விசேட பூசைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், ஐயப்ப விரத முறைகள் தொடர்பாகவும் ஐயப்ப சாமிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்தானத்தில் புனித மாலை அணியும் நிகழ்வு இன்றைய தினம் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

ஆலயத்தில் இன்று அதிகாலை இடம்பெற்ற கணபதி ஹோமத்தை தொடர்ந்து, விசேட அபிசேக ஆராதானை நடைபெற்று, வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து, ஐயப்ப சுவாமி புனித விரதமாலை அணியும் நிகழ்வு நடைபெற்றது.

ஐயப்பசுவாமியின் அருள் வேண்டி பல நூற்றுக்கணக்கான பக்தர்களும், சுவாமிமார்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விரதப்பூஜை வழிபாடுகள் யாவும் விஸ்வப்பிரம்மஸ்ரீ சுபேஸ்வரன் குரு சுவாமி தலைமையிலான குழுவினரால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் - உடப்பு - ஆண்டிமுனை வம்மிவட்டவான் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயத்திலும் மாலை அணிதல் நிகழ்வுகள் இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குருசாமி சின்னையாதாஸ், தலைமையில் பக்தர்களுக்கு மாலை அணிவித்தல் நடைபெற்றது.

மேலும் சபரிமலை ஐயப்ப விரதம் உலகம் பூராவும் உள்ள ஐயப்ப பக்தர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் குறித்த மலைக்கு யாத்திரையினையும் வருடா வருடம் மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையில் அரசானது சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக இவ்வருடம் பிரகடனப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு பேரணி!






உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு பேரணி கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நீரிழிவு பேரணியை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

விழிப்புணர்வு பேரணி வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமாகி வைத்தியசாலை வீதியூடாக சென்று நல்லூரை அடைந்து பின்னர் கே.கே.எஸ் வீதியூடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது. பேரணியில் பேராசிரியர்கள், விரிவுரயாளர்கள், மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள், அதிகாரிகள், மருத்துவபீட மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆளும், ஆண்ட கட்சிகளுக்கு தே.மு.தி.க., சிம்மசொப்பனம் பிரேமலதா




தமிழகம் முழுவதும் பூத் கமிட்டிகள் அமைத்து ஆண்ட கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கும் ஒரே கட்சி தே.மு.தி.க., மட்டுமே என பொதுச் செயலாளர் பிரேமலதா மதுரையில் பேசினார்.

மதுரை கூடல் நகரில் நடந்த 'உள்ளம் தேடி இல்லம் நாடி' பெயரில் பூத் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. நகர் தெற்கு மாவட்ட செயலாளர் மணிகண்டன் தலைமை வகித்தார். இதில் பிரேமலதா பேசியதாவது: மதுரையில் தே.மு.தி.க., துவக்கும் 3ம் கட்ட பயணம் டிச.2ல் ஈரோட்டில் நிறைவு பெறும். 4ம் கட்ட பயணம் கன்னியாகுமரியில் துவங்கி விருதுநகர் வரை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

கடலூரில் ஜன.9ல் நடக்கும் தே.மு.தி.க., வின் மக்கள் உரிமை மீட்பு மாநாட்டை, பந்தல்கால் நட்டு பணிகளை துவக்கியுள்ளோம். இது உலகையே திரும்பி பார்க்க வைப்பதாக இருக்கும். தமிழகம் முழுவதும் பூத் கமிட்டி அமைத்து ஆண்ட கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கும் ஒரே கட்சி தே.மு.தி.க., மதுரையில் 2005ல் நடந்த தே.மு.தி.க., வின் மாநாடு உலகின் நம்பர் 1 மாநாடு. மேலே உள்ளவர்கள் கீழே வந்துதான் ஆக வேண்டும் கீழே உள்ள வர்களும் மேலே செல்லும் காலம் வரும்.

2026 தேர்தலில் மகத்தான கூட்டணியில் வெற்றி பெறுவோம். சட்டசபை தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு பின் வரும் உள்ளாட்சி தேர்தலை மனதில் வைத்து நிர்வாகிகள் செயல்பட வேண்டும். என்னை அடுத்த முதல்வர், நாளைய பிரதமர் என்றெல்லாம் தொண்டர்கள் அழைக்கின்றனர். யாருக்கு என்ன வேண்டுமென்றாலும் கடவுளின் அருளால் கிடைக்கும். கடலூர் 2.0 மாநாட்டுக்கான கவுன்டவுன் ஸ்டார்ட் ஆகி விட்டது என்றார்.

மண்டல பொறுப்பாளர் பன்னீர் செல்வம், மாவட்ட அவைத்தலைவர் ராமர், பொருளாளர் சரவணன், துணைச் செயலாளர் மாணிக்க வாசகம், பெத்தானியாபுரம் பகுதிச் செயலாளர் மாரியப்பன் பங்கேற்றனர். (ஐ)

## என்னை செருப்பால் அடிக்க முயன்றனர்: லாலு மகள் ரோஹிணி குற்றச்சாட்டு



*'தந்தைக்கு சிறுநீரகம் அளித்த என் மீது அவதூறு கருத்துகளை கூறியதுடன், என்னை செருப்பால் அடிக்கவும் முயற்சிகள் நடந்தன' என, ராஷ்ட்ரீய ஜனதா தள நிறுவனரும், பீஹார் முன்னாள் முதல்வருமான லாலு பிரசாத் யாதவின் மகள் ரோஹிணி ஆச்சார்யா பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.*

*பீஹாரில் நடந்த சட்டசபை தேர்தலில், பா.ஜ., தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை தக்க வைத்தது.*

*பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ் அடங்கிய, 'மஹாகட்பந்தன்' கூட்டணி, 34 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றி படுதோல்வியை தழுவியது.*

*லாலுவின் மகள் ரோகிணி ஆச்சார்யா, அரசியலை விட்டும், குடும்பத்தை விட்டும் விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.*

*சமரசம் இல்லை இந்நிலையில், சமூக வலைதளத்தில் ரோஹிணி நேற்று பதிவிட்டுள்ளதாவது:*

*நேற்று முன் தினம் என் வீட்டில் உள்ளவர்களால் அவமானப்படுத்தப்பட்டேன். மோசமான சொற்களால் வசைப்பாடினர். என்னை செருப்பால் அடிக்கவும் முயன்றனர். நான் என் சுயமரியாதையை சமரசம் செய்துகொள்ளவில்லை.*

*உண்மையை விட்டுக் கொடுக்கவில்லை. இதன் காரணமாக நான் அவமானத்தைத் தாங்க வேண்டியிருந்தது.*

*அழுதுகொண்டே என் பெற்றோரையும், சகோதரிகளையும் விட்டுச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. நான் என் தாய் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நான் அனாதையாக்கப்பட்டேன்.*

*நீங்கள் என் வழியைப் பின்பற்றக்கூடாது. எந்த வீட்டிற்கும் ரோஹிணியைப் போன்ற ஒரு மகள் அல்லது சகோதரி இருக்கக் கூடாது.*

*சிறுநீரக தானம் என் தந்தையின் உடல்நிலை முக்கியம் எனக்கருதி, என் சிறுநீரகத்தை தானமாக அளித்தேன். இதை என் புகுந்த வீட்டிற்குக் கூடச் சொல்லவில்லை. திருமணமான அனைத்து பெண்களிடமும் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன்.*

*உங்கள் பிறந்த வீட்டில் ஒரு சகோதரர் இருக்கும்போது, தவறி கூட உங்கள் தந்தையை காப்பாற்றும் பொறுப்பை ஏற்காதீர். உங்கள் சகோதரரின் சிறுநீரகத்தை தானமாக அளிக்கும்படி கேளுங்கள். உங்களைப் பற்றி மட்டுமே சிந்தியுங்கள். (ஐ)*

## டில்லி கார் குண்டு வெடிப்பு வழக்கில் பாக்., பயங்கரவாத அமைப்பின் நிதியுதவி அம்பலம்



டில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தை நிகழ்த்தி உயிரிழந்த டாக்டர் உமர் மற்றும் கைதான டாக்டர்கள் முஸாமில் கனி, ஷாஹீன் உள்ளிட்டோருக்கு நம் அண்டை நாடான பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாத அமைப்பு ஹவாலா நெட்வொர்க் மூலம் 20 லட்சம் ரூபாய் அனுப்பியது தெரியவந்துள்ளது.

'ஆப்பரேஷன் சிந்துார்' நடவடிக்கைக்கு பழி தீர்க்கும் விதமாக, நம் நாட்டில் தாக்குதல் நடத்த, ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாத அமைப்பு சதித் திட்டம் தீட்டி வருவதாக உளவுத்துறை எச்சரித்தது.

இந்நிலையில், ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாத அமைப்பை ஆதரித்து, ஜம்மு - காஷ்மீரில் கடந்த அக்டோபரில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

இது தொடர்பாக ஜம்மு - காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதில் என்ற டாக்டரை போலீசார் கைது செய்தனர்.

மூன்று டாக்டர்கள் அவரிடம் நடத்திய விசாரணையில் ஜெய்ஷ் -- இ -- முகமது பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்த காஷ்மீரைச் சேர்ந்த முஸாமில் அகமது கனி, அதில் அகமது மற்றும் உத்தர பிரதேச மாநிலம் லக்னோவைச் சேர்ந்த ஷாஹீன் சயீத் உள்ளிட்ட மூன்று டாக்டர்களை போலீசார் கைது செய்தனர்.

இவர்கள் மூவரும், ஹரியானாவின் அல் பலாஹ் மருத்துவப் பல்கலையில் பணியாற்றியவர்கள் என தெரியவந்தது.

அப்பல்கலை வளாகம் அருகே பதுக்கி வைத்திருந்த 360 கிலோ வெடிபொருட்களையும் போலீசார் கைப்பற்றினர்.

இதே பல்கலையைச் சேர்ந்த டாக்டர் உமர் நபிக்கு இவர்களுடன் தொடர்பு இருப்பது தெரிந்தது. அவரை போலீசார் தேடி வந்த நிலையில், டில்லியில் வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட காரை ஓட்டிச் சென்று அவர் வெடிக்க வைத்தார்.

ரூ.20 லட்சம் இந்த வழக்கை என்.ஐ.ஏ., எனப்படும் தேசிய புலனாய்வு அமைப்பு விசாரிக்கிறது. இதற்கிடையே டாக்டர்கள் அடங்கிய பயங்கரவாத கும்பல் மற்றும் டில்லி குண்டுவெடிப்பு பற்றி மத்திய உளவுத்துறையும் விசாரித்து முதற்கட்ட அறிக்கை அளித்துஉள்ளனர்.

அது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

டாக்டர்கள் உமர், முஸாமில், ஷாஹீன் ஆகியோருக்கு ஜெய்ஷ் - -இ - -முகமது அமைப்பு ஹவாலா நெட்வொர்க் மூலம், 20 லட்சம் ரூபாயை அனுப்பி உள்ளது.

அதை வைத்தே கள்ள சந்தையில் அமோனியம் நைட்ரேட் மற்றும் டி.ஏ.டி.பி., எனப்படும் டிரைஅசிடோன் டிரைபெராக்சைட் போன்ற வேதிப்பொருட்களை குண்டு தயாரிக்க வாங்கி உள்ளனர்.

முன் கூட்டியே இந்த கும்பலை காஷ்மீர் போலீசார் கண்டுபிடித்ததால் டிசம்பர் 6ல் டில்லியில் நடக்க இருந்த மிகப்பெரிய குண்டுவெடிப்பு தடுக்கப்பட்டுள்ளது. இந்த சதித்திட்டத்தில் பாகிஸ்தானுக்கு நேரடி தொடர்பு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

சுவிஸ் தகவல் தொடர்பு செயலி டில்லி செங்கோட்டை குண்டுவெடிப்பில் தொடர்புடைய அல் - பலாஹ் பல்கலையைச் சேர்ந்த டாக்டர்கள் உமர், முஸ ாமில் மற்றும் உ.பி.,யைச் சேர்ந்த ஷாஹீன் ஆகிய மூவரும் 'த்ரீமா' என்ற சுவிஸ் தகவல் தொடர்பு செயலியைப் பயன்படுத்தியது விசாரணையில் தெரியவந்து உள்ளது.

பெண் டாக்டர் கைது டாக்டர் முஸாமில் கனியுடன் தொடர்பில் இருந்ததாக மற்றொரு டாக்டரான பிரியங்கா ஷர்மா என்பவரை என்.ஐ.ஏ., அதிகாரிகள் நேற்று சந்தேகத்தின்படி கைது செய்தனர். ஜம்மு - காஷ்மீரின் அனந்தநாக்கில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியில் இவர் பணியாற்றி வருகிறார். அவரது மொபைல் போன் மற்றும் சிம் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

அல் பலாஹ் பல்கலை

நிறுவனர் குற்றவாளி


டில்லி கார் குண்டுவெடிப்பில் தொடர்புடைய டாக்டர்கள் பணியாற்றிய ஹரியானாவின் அல் பலாஹ் பல்கலையின் நிறுவனர் மற்றும் இயக்குநர் இருவரும் முதலீட்டாளர்களின் 7.5 கோடி ரூபாய் நிதியை மோசடி செய்த வழக்கில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு, சில ஆண்டுகளுக்கு முன் சிறைத்தண்டனை அனுபவித்தது தெரியவந்துள்ளது. (ஐ)

# குளிர்காலத்தில் காது வலி ஏற்படுவது ஏன்?



மார்கழி, தை, மாசி மாதங்களின் போது குளிரால் தமிழ்நாட்டு மக்களுக்கு உடலில் சில பாதிப்புகள் ஏற்படும். அதிலும் குறிப்பாக குளிர் காலத்தின் போது முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் காது வலி அடிக்கடி ஏற்படும். இதிலிருந்து மீள என்ன செய்யலாம் என மருத்துவகள் விளக்கம் அளித்து உள்ளனர்.

குளிர்காலத்தின் போது ஏற்படும் காது வலி இயல்பானது என நம்மில் பலர் எண்ணுகின்றனர். ஆனால் உரிய நேரத்தில் கவனிக்கத் தவறினால், காதில் ஏற்படும் வலி அதிகரிக்கும். குளிர்காலத்தில் நமக்கு ஏன் காது வலி ஏற்படுகிறது?



### குளிர்காலத்தில் காதுகளில் எதனால் வலி ஏற்படுகிறது?

நமது மூக்கையும் காதையும் இணைக்கும் ஒரு குழாய் தான் இதற்குக் காரணம். யூஸ்டேஷியன் குழாய்(நுரளவயஉாயைெ வரடிந) என்று அழைக்கப்படும் இந்தக் குழாய், குளிர் காலத்தின் போது மூக்கின் வழியாக உடலுக்குள் நுழையும் வறண்ட குளிர் காற்றின் காரணமாக மூடிக்கொள்கிறது. இந்தக் குழாய் மூடுவதன் விளைவாக, காது சவ்வுகள் இழுக்கப்பட்டு நமக்கு காது வலி ஏற்படுகிறது. அது மட்டுமின்றி உடலில் மற்ற பாகங்களில் இருப்பதைப் போல நமது வெளிப்புற காதுகளில் கொழுப்பு கிடையாது. இதன் காரணமாக காதுகளைச் சுற்றி எந்தப் பாதுகாப்பும் இல்லை. விலங்குகள் குளிர் காலத்தின் போது தங்களைப் பாதுகாத்து கொள்ள காதுகளை வைத்து முகத்தை மூடிக்கொள்ளும், ஆனால் மனிதர்களுக்கு இத்தகைய அமைப்பு இல்லாததால் குளிர்காலத்தின் போது நமது காதுகளுக்கு வலி ஏற்படும்.

### மூளையில் உள்ள கெட்ட நினைவுகளை மட்டும் நம்மால் அழிக்க முடியுமா?

6 ஜனவரி 2023

உடனடி எடை குறைப்பும் உளவியல் பின்னணியும் - ஒளிந்திருக்கும் ஆபத்துகள் என்ன?

5 ஜனவரி 2023

ஹெர்னியாவுக்கும் ஆண்மைக் குறைவுக்கும் என்ன தொடர்பு?

5 ஜனவரி 2023

### யாருக்கெல்லாம் குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படும்?

குழந்தைகளுக்கு இருக்கும் யூஸ்டேஷியன் குழாய் அளவில் சிறியதாக இருக்கும். இதனால் குழந்தைகளுக்கு குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படுகிறது. அதே போல முதியவர்களுக்கும் குளிர்காலத்தில் வலி ஏற்படும் வாய்ப்புள்ளது. பெண்களைப் பொறுத்தவரை 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இந்தப் பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளது.

### காது வலி ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

காது வலிபட மூலாதாரம்,புநவவல ஐஅயபநள

குழந்தைகள், முதியவர்கள் குளிர்காலத்தில் வீட்டில் இருக்கும் போது வெளிப்புற காதுகளை முழுவதுமாக மூடும் வகையில் குல்லா அணிந்து கொள்வதன் மூலம், வறண்ட குளிர்காற்று காதுக்குள் செல்வதைத் தடுக்க முடியும். வெளியே செல்லும் போது காதையும், மூக்கையும் சேர்த்து மூடும் வகையில் ஸ்கார்ஃப் அணிந்து கொள்ளலாம். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அணிவதைப் போன்று வெளியே செல்லும் போது ஸ்கார்ஃப் அணிந்து சென்றால், காது வலி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

### எந்த மாதங்களில் குளிரால் ஏற்படும் காது வலி ஏற்படுகிறது?

பொதுவாக டிசம்பர் மாதத்தில் தான் தமிழ்நாட்டில் குளிர்காலம் தொடங்கும் என்றாலும், பருவமழைக்காலமான அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை குளிந்த காற்று வீசக்கூடும். அதனால் இந்தக் காலகட்டங்களில் நாம் பாதுகாப்பாக இருப்பது நல்லது.

### சளி, மூக்கடைப்பு பிரச்னையால் காது வலி வருமா?

குளிர்காலத்தின் போது காற்றில் வழக்கத்தைவிட அதிகமாக தூசு நிறைந்து இருக்கும். இதன் காரணமாக நாம் சுவாசிக்கும் காற்று மூக்கு வழியாக நுழையும் போது அலர்ஜி ஏற்படுகிறது. இதனால் சளி தொந்தரவு இருக்கும் நபர்களுக்கு யூஸ்டேஷியன் குழாயினுள் தூசு நுழைவதன் காரணமாக காது வலி இயல்பாகவே ஏற்படுகிறது. இது மட்டுமின்றி குளிர்காலத்தின் போது வெட்டவெளிகளில் பணியாற்றும் விவசாயி போன்ற நபர்களில் வெகு சிலருக்கு ஒரு பிரச்னை ஏற்படுகிறது. காதில் ஏற்படும் வலியின் காரணமாக முகத்துடன் இணைந்துள்ள நரம்பில் அழுத்தம் ஏற்பட்டு, அந்த நரம்பின் செயல்பாடு பாதிப்புக்குள்ளாகிறது. இதன் விளைவாக முகத்தில் உள்ள தசைகள் வேலை செய்யாமல் போகின்றன. இதை மருத்துவ குறிப்பில் பெல்ஸ் பாலஸி(டீநடட'ள யடளல) என்று அழைக்கிறார்கள். இந்த பாதிப்பு பிரபல பாடகர் ஜஸ்டின் பீபருக்கு சமீபத்தில் ஏற்பட்டது.

### சைனஸ் தொந்தரவு இருக்கும் நபர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும்?

காது வலி பட மூலாதாரம்,Getty Images





குளிர் காலத்தின் போது நிலவும் வறண்ட குளிர் காற்றினால், சைனஸ் பிரச்னை உள்ள நபர்களின் மூக்குகளுக்கு உள்ளே இருக்கும் சதைகள் வீங்கும். இதனால் அவர்களுக்கு காது வலி, தலை வலி போன்ற உபாதைகள் ஏற்படும். மற்ற நபர்களை விட சைனஸ் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு குளிர்காலத்தின் போது காது வலி ஏற்படும் வாய்ப்பு அதிகம். காது வலி ஏற்படும் போது என்ன சிகிச்சை எடுக்க வேண்டும்?

காது வலி ஏற்பட்ட உடன் மருந்துகளோ, மருத்துவரையோ அணுக வேண்டிய அவசியம் இல்லை. முதல் கட்டமாக குளிர் காலத்தில் வெளியே சென்று வந்த பிறகு, ஆவி பிடிப்பது நல்லது. இப்படி செய்வதன் மூலம் மூக்கினுள் ஈரப்பதம் நிறைந்த சூடான காற்று செல்வதன் வழியே நிவாரணம் கிடைக்கும். அதன் பிறகும் வலி இருந்தால், மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது அவசியம்.

# வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றவாளி என அறிவிப்பு

மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், அவர் குற்றவாளி என அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

கடந்தாண்டு வங்கதேசத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் பெரும் வன்முறை வெடித்தது. இதில், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையை தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்தது. மேலும், அவர் வங்கதேசத்தை விட்டு வெளியேறி, இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

இதையடுத்து, நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில், வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த உடன் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை, ஊழல் செய்தது உட்பட ஏராளமான வழக்குகள் பதியப்பட்டுள்ளன. சமீபத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு ஆறு மாத சிறை தண்டனை விதித்து, அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

கடந்த ஆகஸ்டில் அரசின் இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக போராடுவோரை சுட்டுக்கொல்ல ஹசீனா உத்தரவிட்ட ஆடியோ வெளியானது. இதை ஆதாரமாக வைத்து ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர், முன்னாள் போலீஸ் ஐ.ஜி., ஆகியோர் மீது, மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக புதிய வழக்கை தீர்ப்பாயம் பதிந்து விசாரணை நடத்தி வந்தது. இந்த நிலையில், ஷேக் ஹசீனாவுக்கான தண்டனையை இன்று (நவ., 17) அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் அறிவித்தது.

மனித குலத்திற்கு எதிராக ஷேக் ஹசீனா குற்றம் செய்துள்ளார் என அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் அறிவித்துள்ளது. இதனால் இந்த வழக்கில் ஷேக் ஹசீனா குற்றவாளி என அறிவிக்கப்பட்டு உள்ளார். அவருக்கான தண்டனை விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அதிரடி தீர்ப்பு

இது குறித்து சர்வதேச குற்ற தீர்ப்பாயம் நீதிபதி கூறியதாவது:



மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை ஷேக் ஹசீனா செய்துள்ளார். அவரது ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளது.

அதிகாரத்தில் நீடிக்க ஷேக் ஹசீனா அதிகாரத்தை பயன்படுத்தி உள்ளார். அவர், போராட்டக்காரர்களை கொல்ல ஹெலிகாப்டர் உள்ளிட்ட கொடிய ஆயுதங்களை பயன்படுத்த உத்தரவிட்டு இருக்கிறார்.

போராட்டக்காரர்கள் மீது ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளது. போராட்டக்காரர்களுக்கு மருத்துவ உதவி மறுக்கப்பட்டு உள்ளது. கடந்தாண்டு ஜூலை-ஆகஸ்ட் மாதம் நடந்த போராட்டங்களில் 1,400 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 24 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஷேக் ஹசீனா போராட்டக்காரர்களை தூண்டிவிட்டார். அவர்களை அவர் களங்கப்படுத்தினார்.

இவ்வாறு சர்வதேச குற்ற தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

ஷேக் ஹசீனா தற்பொழுது இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள நிலையில் அவருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என வழக்கு விசாரணையின் போது வாதங்கள் முன்வைக்கப்பட்டது. (ஐ)

# சவுதி அரேபியாவில் பஸ்சில் தீ: இந்தியர்கள் 42 பேர் உயிரிழப்பு

சவுதி அரேபிய விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கொள்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய தூதரகங்கள் முழு உதவி செய்து வருகின்றன என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மெக்காவில் இருந்து மதீனாவுக்கு யாத்ரீகர்கள் சென்ற பஸ் விபத்தில் சிக்கி 42 பேர் பலி ஜெட்டாவில் உதவிக்கு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு உள்ளது. 800244003 என்ற உதவி எண் அறிவிப்பு.



சவுதி அரேபியாவில் பஸ்-டீசல் லாரி மோதி ஏற்பட்ட விபத்தில் இந்தியர்கள் 42 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சவுதி அரேபியாவின் மதீனா அருகே பஸ்-டீசல் லாரி மோதி விபத்துக்குள்ளானது. மெக்காவில் இருந்து மதீனாவிற்கு உம்ரா புனித பயணிகள் சென்ற போது விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த கோர விபத்தில் பஸ்சில் தீப்பற்றியது. இதில் பஸ்சில் பயணித்த இந்தியர்கள் 42 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

இதில், ஐதராபாத்தை சேர்ந்த 20 பெண்கள், 11 குழந்தைகள் என்பது தெரியவந்துள்ளது. மற்ற உடல்களை அடையாளம் காணும் நடந்து வருகிறது. இது தொடர்பாக ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெலுங்கானா அரசு தெரிவித்துள்ளது.

முதல்வர் ரேவந்த் ரெட்டி புதுடில்லியில் உள்ள அதிகாரிகளை தொடர்பு கொண்டு, தூதரக அதிகாரிகளுடன் நெருக்கமாக செயல்படுமாறு தெரிவித்துள்ளார்.

அதிகாலையில் துயரம்

இந்த விபத்து இந்திய நேரப்படி அதிகாலை 1:30 மணியளவில் மதீனாவிலிருந்து 160 கி.மீ தொலைவில் உள்ள முப்ரிஹாத் என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது. அந்த நேரத்தில் பல பயணிகள் தூங்கிக் கொண்டிருந்ததால், பஸ் மோதிய பிறகு தீப்பிடித்து எரிந்தபோது அவர்கள் தப்பிக்க முடியவில்லை. இதுவே அதிக உயிரிழப்புக்கு காரணம். பஸ் முற்றிலுமாக எரிந்து நாசமானது. இதனால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது மிகவும் சவாலானது.

மீட்புக் குழுவினர் சம்பவ இடத்தில் நடந்த துயரம் குறித்து தகவல் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து அதிகாலை நேரத்தில் நிகழ்ந்துள்ளது. நள்ளிரவு நேரம், அதிகாலையில் வாகன பயணத்தை தவிர்ப்பது நல்லது. வாகனம் ஓட்டுபவர், தூக்க கலக்கத்தில் சற்று அசந்தாலும் பெரும் விபத்தில் சிக்க வாய்ப்புள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த விபத்து அதிகாலை நேரத்தில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

ஒவைசி வலியுறுத்தல்

இந்த விபத்தில் குறித்து ஏஐஎம்ஐஎம் கட்சி தலைவர் அசாதுதீன் ஒவைசி அளித்த பேட்டி: தீப்பிடித்தபோது பஸ்சில் யாத்ரீகர்கள் 42 பேர் இருந்துள்ளனர். ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத் தலைவர் அபு மாத்தன் ஜார்ஜ்/டன் நான் தொடர்பில் இருக்கிறேன். விபத்து குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. உடல்கள் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுவதையும், காயமடைந்தவர்களுக்கு முறையான மருத்துவ வசதி வழங்கப்படுவதையும் மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு ஒவைசி கூறியுள்ளார்.

உதவி எண்கள் அறிவிப்பு

இந்த விபத்து குறித்து சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கை:

சவுதி அரேபியாவின் மதீனா அருகே ஒரு துயரமான பஸ் விபத்தைக் கருத்தில் கொண்டு, ஜெட்டாவில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் 24ஒ7 கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. 8002440003 என்ற உதவி எண்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஜெய்சங்கர் இரங்கல்

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ச ங்கர் வெளியிட்ட அறிக்கை: சவுதி அரேபியாவின் மதீனாவில் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட விபத்தில் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தேன். ரியாத்தில் உள்ள எங்கள் தூதரகம் மற்றும் ஜெட்டாவில் உள்ள துணைத் தூதரகம் இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்கள் மற்றும் குடும்பங்களுக்கு முழு ஆதரவை வழங்கி வருகின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். சவுதி அரேபியா அரசுடன் முழு தொடர்பில் இருக்கிறோம். இவ்வாறு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

வருத்தமடைந்தேன்

பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ‘மதீனாவில் இந்தியர்கள் விபத்தில் சிக்கியதால் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

ரியாத்தில் உள்ள எங்கள் தூதரகம் மற்றும் ஜெட்டாவில் உள்ள துணைத் தூதரகம் அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றன. எங்கள் அதிகாரிகள் சவுதி அரேபிய அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பில் உள்ளனர். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார். (ஐ)

## ஹசீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊவா, பரனகம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மேற்படி மாணவனிடம் இருந்து 33 கிராம் 230 மில்லிகிராம் ஹசீஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது

சந்தேகநபரை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்திய வேளை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆளுங்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் அருண் ஹேமசந்திரா உட்பட அக்கட்சியிலுள்ள அனைத்து தமிழ் உறுப்பினர்களும் உடன் பதவி விலக வேண்டும்." - என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் அவர் இட்டுள்ள பதிவு வருமாறு,

"அமைச்சர் ஆனந்த விஜயபாலவும் தே. ம. ச. அரசும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு கோழைத்தனமாக அடிபணிவதை இலங்கைத் தமிழரசுக் கட்சி கேவலமாகக் காண்கின்றது.

நேற்றிரவு அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை பொலிஸாரினால் அகற்றப்பட்ட போது, அரசாங்கம் இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்து கொள்கின்றது என்று சிலர் நினைத்தார்கள்.

ஆனால் அப்படியல்ல என்பதை சில மணி நேரத்துக்குள்ளேயே அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டதாகவும் அது இன்று மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்த போதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது.

தே. ம. ச. அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. இக் கட்சியைச் சேர்ந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா உட்பட அனைத்து தமிழ் உறுப்பினர்களும் உடனடியாக இராஜிநாமா செய்ய வேண்டும்." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று அதே இடத்தில் மீண்டும் புத்தர் சிலை வைக்கப்படும். திருகோணமலையில் அமைதியின்மை ஏற்பட இடமளிக்க முடியாது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நாடாளுமன்றத்தில் இன்று முற்பகல் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குறித்த பகுதியில் குழப்பம் ஏற்பட்டால் புத்தர் சிலைக்குச் சேதம் ஏற்படக்கூடும் எனத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து நேற்றிரவு பொலிஸார் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றி, சிலைக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினர்.

இன்று அந்தப் புத்தர் சிலையை குறித்த விகாரையில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளோம். அத்தோடு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால், அங்கு சட்டவிரோதமாக நடத்தப்படும் கடை ஒன்று தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பின்படியே செயற்பட வேண்டியுள்ளது.

காணி குறித்து நீதிமன்றம் வழங்கும் உத்தரவுக்கமையவே நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்குப் பின்னர் திருகோணமலையில் எந்தப் பிரச்சினையும் நடப்பதற்கான சாத்தியங்கள் இல்லை." - என்றார்.

## சீனாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீனாவில் இருந்து அதிகளவு வெளிநாட்டுப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதற்கமைய 2026 ஆரம்பத்தில் சீனாவின் செங்டு நகரில் மேற்படி கொன்சல் ஜெனரல் அலுவலகம் அமையும் என்று நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"சீனாவில் சில நகரங்களில் இலங்கையின் கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்நிலையிலேயே புதிய அலுவலகம் அமைகின்றது.

அதேபோல் பிரேசிலிலும் கொன்சல் ஜெனரல் அலுவலகம் மீள திறக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன." - என்றார்.

## திருமலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த அடாவடி நடவடிக்கையானது தமிழ்த் தரப்பினரைக் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது. அவர்கள் இந்த அரசுக்கு எதிராகக் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

சட்ட அனுமதி இன்றி நேற்று இரவு 8 மணியளவில் இந்தப் புத்தர் சிலை இந்த இடத்தில் வைக்கப்பட்டது. எனினும், இரவு 11 மணியளவில் துறைமுகப் பொலிஸார், திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் வந்து பௌத்த பிக்குகளின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றினர்.

பின்னர் இந்தப் புத்தர் சிலை துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று நண்பகல் வரை அங்கு வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் வைத்து சிலை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்படும் எனக் கூறினார்.

இதையடுத்து கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பௌத்த பிக்குமார், பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட விசேட கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வழங்கியிருந்த அறிவுறுத்தலின் அடிப்படையில் மீளவும் புத்தர் சிலை, அகற்றப்பட்ட அதே இடத்தில் வைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டு இதன்படி சிலை மீள வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட அனுமதி அற்ற சிற்றுண்டிச்சாலை நேற்று அகற்றப்பட இருந்தது. ஆனால், அதனை அகற்றுவது தொடர்பில் தடையாணை உத்தரவு ஒன்றை இந்தப் பகுதி பௌத்த பிக்கு கொழும்பு உயர்நீதிமன்றத்தில் பெற்றிருந்தமையால் தாம் எதிர்பார்த்தபடி இன்று சிற்றுண்டிச்சாலை இடித்து அகற்றப்படவில்லை எனத் திருகோணமலை மாவட்ட கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரி தகவல் தெரிவித்தார்.

நேற்றுக் காலை முதல் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உற்பட அனைத்து உயர் பொலிஸ் அதிகாரிகளும், விசேட அதிரடிப் படையினரும் இங்கு பாதுகாப்புப் பணிகள் ஈடுபட்டிருந்தனர்.

புத்தர் சிலை மீளவும் வைக்கப்படுவதற்கு சற்று முன்னர் அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமனவுக்கு அங்கு திரண்டிருந்த பௌத்த பிக்குமார் உட்பட சிங்கள மக்கள் அவரின் வருகையை எதிர்த்துக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கடுமையாகக் கோஷமிட்டனர். இதனையடுத்து அவர் அங்கிருந்து உடனடியாக வெளியேறினார்.

இது இவ்வாறிருக்க திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதியில் முன் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் அடாத்தாக புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிராகவும், இது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனத் தெரிவித்தும் திருகோணமலை மாநகர சபையின் மேயர் க.செல்வராஜா, துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் இன்று முறைப்பாடு செய்துள்ளார்.

# எச்.ஐ.வி தொற்று ஆண்களிடம் அதிகரிப்பு




தேசிய பாலியல் நோய்/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமீப தரவுகளின் படி, இலங்கையில் ஆண்களை மட்டுமே மையமாகக் கொண்ட எச்.ஐ.வி தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

2025 ஆம் ஆண்டில் புதிதாக பதிவான பெரும்பாலான நோயாளிகள் ஆண்கள் என தேசிய பாலியல் நோய்/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாலியல் நோய்/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி, 2025 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டில் (ஏப்ரல்-ஜூன்) மட்டும் 200 புதிய எச்.ஐ.வி தொற்றுகள் பதிவாகியுள்ளன.

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 230 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், இது 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு காலாண்டில் பதிவு செய்யப்பட்ட அதிக பட்ச எண்ணிக்கையாகும்.

2025 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டில் (ஏப்ரல் மற்றும்ஜூன்) மாதங்களுக்கு இடையில் பதிவான புதிய நோயாளிகளில், 20 ஆண்களும் ஒரு பெண்ணும் (15-24) வயதுக்கு உட்பட்டவர்கள்,மற்றவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

மேலும்,2025 ஆம் ஆண்டில் பதிவான ஆண்-பெண் எச்.ஐ.வி தொற்றுகளின் விகிதம் 7.6 முதல் 1 வரை உள்ளனர் இந்த ஆண்டு இதுவரை, எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான 23 இறப்புகள் பதிவாகியுள்ளன.

2024 ஆம் ஆண்டில், 47 நபர்கள் எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டனர், அதே நேரத்தில் நாடு முழுவதும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானஎச்.ஐ.வி பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

2009 முதல்,இலங்கையில் மொத்தம் 6,759 எச்.ஐ.வி நோயாளிகள் பதிவாகி உள்ளனர், இதில் 5,366 ஆண்கள் மற்றும் 1,573 பெண்கள் அடங்குவர். அதிகரித்து வரும் போக்கிற்கு மத்தியில், தேசிய பாலியல் நோய்/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்,ஆணுறைகளின் பயன்பாடு, முன்-வெளிப்பாட்டு தடுப்பு (PrEP), மற்றும் பிந்தைய-வெளிப்பாடு தடுப்பு (PEP) உள்ளிட்ட எச்.ஐ.வி/எஸ்.டி.ஐ தடுப்பு கல்வியை பள்ளி பாடத்திட்டங்களில் ஒருங்கிணைக்க முன்மொழிந்துள்ளது. இருப்பினும், இந்த திட்டம் மதிப்பாய்வு மற்றும் விமர்சனத்தில் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.(ஐ)

# கொஸ்லந்தையில் மண்சரிவு அபாயம்



பெரகல-வெல்லவாய சாலையில் ஹல்துமுல்லவில் உள்ள கொஸ்லந்த கல்வெட்டுக்கு மேலே உள்ள மலையின் ஒரு பகுதி திங்கட்கிழமை (17) காலை தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக இடிந்து விழுந்துள்ளது.

இதன் காரணமாக பல வீடுகள் ஆபத்தில் உள்ளதாக ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் கே.ஏ.ஜே. பிரியங்கிகா தெரிவித்தார்.

நிலச்சரிவுக்கு அருகில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் வசித்து வந்த இரண்டு குடும்பங்கள் தற்போது தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும், இந்த நிலச்சரிவு இடம் முந்தைய சந்தர்ப்பங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்ட இடமாகும் என்றும் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து அவசர ஆராய்ச்சி நடத்த தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது, மேலும் அதன் பரிந்துரைகளின்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பிரதேச செயலாளர் கூறினார்.

கொஸ்லந்த-வெல்லவாய சாலையில் இந்த மூடப்பட்ட பகுதியை கடந்து செல்லும்போது வாகன ஓட்டிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு பிரதேச செயலாளர் மற்றும் காவல்துறையினரும் கேட்டுக்கொள்கிறார்கள்.(ஐ)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk